வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05 02.08.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 215 பக்கங்கள் : 12

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## பாராளுமன்ற பெரும்பான்மை ஜனாதிபதியின் வசமாகிவிட்டது

### கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு

- பரந்த கூட்டணி சார்பில் ரணில் போட்டி
- மகிந்தவிடம் அரசியல் படிக்காத பெரமுன

கொழும்பு, ஓகஸ்ட் 02



பரந்துபட்ட அரசியல் கூட்டணியின் சுயேச்சை வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் ஜனாதிபதி வசமாகிவிட்டது. பொதுஜன பெரமுனவினர் மகிந்த ராஜபக்ஷ விடம் அரசியல் கற்றுக்கொள்ளாமல் இருப்பது கவலைக்குரியது என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். 11



## பிரதமர் தினேஷும் ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 02

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

கட்சியின் மத்திய குழு நேற்று வியாழக்கிழமை பிற்பகல் கூடியபோது இந்தத் தீர்மானம் ஏகமனதாக எட்டப்பட்டதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (ஐ)

## நிர்வாகத்துக்கான டி. ஐ. ஜியாக லலித் பத்திநாயக்க நியமனம்!

கொழும்பு, ஓக. 02



பொலிஸ் மா அதிபரின் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு மறு அறிவித்தல்வரை மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு நேற்று வியாழக்கிழமை கூடியபோது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது. 11

## கடற்படை படகு மோதியதில் இந்திய மீனவர் மூழ்கிப் பலி!

### மற்றொருவரை காணவில்லை

- பா. பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஓக. 02

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்ய முயன்றபோது கடற்படை படகு மீனவர் படகை மோதியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு மீனவரை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நெடுந்தீவு கடற்பரப்பில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய படகை அவதானித்தனர். 11

## தமிழ் பொது வேட்பாளர் வரும் வாரம் இறுதியாகும்!

### சுரேஷ் பிறேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஓக. 02

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ் பொது வேட்பாளர் ஒரு வாரத்துக்குள் இறுதி செய்யப்படுவார் என்று தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்.) தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தமிழ் பொது 11

## பெரமுனவின் வேட்பாளர் புதனன்று அறிவிக்கப்படுவார்!

கொழும்பு, ஓக. 02

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் புதன்கிழமை உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த உள்ளூராட்சிமன்ற முன்னாள் பிரதிநிதிகளின் கூட்டம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் எவ்வாறு பங்களிப்பு செய்வது என்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## இந்திய மீனவர் உயிரிழப்பு இராமேஸ்வரத்தில் முற்றுகை!

இராமேஸ்வரம், ஓக. 02

இந்திய மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை இராமேஸ்வரத்தில் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் போராட்டத்தால் இராமேஸ்வரம் முற்றாக இயல்பு நிலையை இழந்தது.

இலங்கை கடற்படையின் படகு மோதியதில் இந்திய மீனவர் ஒருவர் உயிரிழந்த, மற்றொருவர் காணாமல் போன சம்பவத்தையடுத்தே நேற்று மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இராமேஸ்வரம் அரச பணிமனையை முற்றுகையிட்டும் மதுரை தேசிய நெடுஞ்சாலையை மறித்தும் மீனவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மீனவர்களின் போராட்டத்தால் இயல்புநிலை பாதிக்கப்பட்டது. அத்துடன், பேருந்துகள் எவையும் ஓடவில்லை. 11

## பொது வேட்பாளர் தோற்றால் அரசுடன் பேச முடியாதாம்!

### சுமந்திரன் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 02

தமிழ் பொதுவேட்பாளர் தோல்வியடைந்த பின்னர், ஆட்சிப்பீடமேறும் பெரும்பான்மையின ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் தமிழர்களுக்கான தீர்வு குறித்து பேச்சுகளை நடத்தமுடியாத நிலை ஏற்படும் - இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் 11

## தென்னக்கோன், குணரட்னவுக்கு உயர்நீதிமன்றம் அழைப்பாணை!

கொழும்பு, ஓக. 02

தேசபந்து தென்னக்கோன் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரட்ன ஆகியோரை எதிர்வரும் 9ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு உயர் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில நாட்கள்தான் இருக்கின்றன. நமது பேச்சுத் தமிழில் சொல்வதென்றால், "அந்த மூலைக்கு வந்துவிட்டது."

இன்னமும் அதுகுறித்து முடிவெடுக்காத ஒரு தமிழ் கட்சி நமது தமிழ் அரசு கட்சிதான். ஏற்கனவே இந்தப் பத்தியில் பல தடவை சொன்னதுபோல, வாக்களிப்புக்கு முதல்நாள் இரவு தான் முடிவெடுக்குமோ தெரியவில்லை. பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா உயிருடன் இருக்கும் காலம்வரை அத்தனை முடிவுகளும் அப்படித்தான் - முதல் நாளில்தான் எடுக்கப்பட்டன. அந்தப் பாரம்பரியத்தை கட்சி தொடரும் என்றே தெரிகின்றது.

கட்சியின் ஒரு தரப்பு தமிழ் பொதுவேட்பாளருக்கு எதிராகக் களம் இறங்கிப் பல நாட்கள் ஆகிவிட்டன. மற்றைய அணியோ பொதுவேட்பாளர் "காலத்தின் தேவை" என்று கதை சொல்லிக் கொண்டிருக்கின்றது.

அவர்கள் யாரை ஆதரிப்பது என்பதை தமது மத்திய செயல் குழுவைக் கூட்டியே முடிவெடுப்பதாக கூறிக்கொண்டிருக்கின்றார்கள். மத்திய செயல் குழுவில் ஐம்பது பேர் இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. அந்த ஐம்பது பேரில் சம்பந்தனும் அடக்கம். சம்பந்தன் மாத்திரமல்ல, ஏற்கனவே இயற்கை எய்திவிட்ட பலர் இன்றும் மத்திய செயல்குழுவில் இருக்கின்றனர். அவர்களின் இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படவில்லை. சிலவேளை அவர்கள் கூட்டம் நடந்தால், மேலே இருந்து "சூம்" வழியே கலந்துகொள்வார்களோ தெரியவில்லை.

தமிழ் அரசின் மத்திய செயல் குழு கூட்டம் நடக்கவேண்டுமானால் ஏழு நாட்களுக்கு முன்னதாக உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படவேண்டும் என்று கட்சி யாப்பு சொல்கிறது என்று ஓர் உறுப்பினர் சொன்னார். அவ்வாறு நடப்பதெனில், இன்று அதற்கான அறிவிப்பு வந்தாலும் ஒன்பதாம் திகதிதான் கூட்டம் நடக்கலாம். அப்படி ஏழு நாட்கள் காலஅவகாசம் கொடுக்காமல் கூட்டம் நடந்து, அதில் பொதுவேட்பாளர் தெரிவுக்கு ஆதரவாக அந்தக் கூட்டம் முடிவெடுத்து விட்டால் மற்றுமொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

ஆக, அப்படி ஒன்பதாம் திகதியோ அல்லது அதற்கு பின்னதாகவோ கூட்டம் நடந்தாலும் ஒரு கூட்டத்திலேயே கட்சி முடிவெடுத்துவிடும் என்றும் நாம் நம்பிவிட முடியாது. அப்படி இன்னுமொரு ஏழு நாள் அவகாசம் கொடுத்து அடுத்த கூட்டம் கூடுகின்ற போது நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுவிடும். அதாவது தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்துவிடுவார். அதற்கு பின்னர், தமிழ் அரசு பொதுவேட்பாளருக்கு ஆதரவான முடிவை எடுத்தாலும் அந்த விடயத்தில் அவர்கள் ஆதரவாக பிரசாரம் செய்யலாமே தவிர, வேறு எந்த வகையிலும் பங்களிப்பை செய்யமுடியாது போகலாம். சிலவேளைகளில் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒருவர் வேட்பாளராக இருந்தாலும் அவர்கள் தூர விலகியே இருக்க வேண்டிவரும்.

இதனால், தமிழ் அரசுக் கட்சி இனி, தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் பயணிப்பது என்பது பெரும்பாலும் சாத்தியமில்லாதது.

இனி, அவர்கள் மாற்றுவழியாக ஒரு தெற்கு வேட்பாளரை ஆதரிக்க முடிவெடுத்துவிட்டால் தமிழ் பொது வேட்பாளர் தேர்தல் பிரசார மேடை அவர்களின் முடிவை விமர்சிப்பதிலேயே அதிக கவனத்தை செலுத்தும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதுதான். ஆக, ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடை என்பது, வடக்கு - கிழக்கில் தமிழ் பொதுவேட்பாளர் எதிர் தமிழ் அரசு என்றுதான் இருக்கப்போகின்றது.

அதைவிட முக்கியமானது, தமிழ் பொது வேட்பாளர் தெரிவுக்கு ஆதரவாக இருக்கும் சிறீதரன் எம். பி. ஒரு முக்கிய கருத்து ஒன்றை அண்மையில் தெரிவித்திருந்தார். தெற்கு வேட்பாளர் எவராவது தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி தீர்வை முன்வைப்பாரேயானால், அவர்களை ஆதரிப்பதற்கு தமிழ் அரசு பின்னிற்காது என்று சிறீதரன் தெரிவித்திருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. அப்படியொரு தீர்வை தெற்கில் எந்த வேட்பாளரும் முன்வைக்கப் போவதில்லை என்பது நமக்கு தெரிந்ததுதான். அப்படியில்லை எனில், தெற்கு வேட்பாளர் எவரையும் சிறீதரன் ஆதரிக்கமாட்டார் என்றால் கட்சி முடிவெடுப்பதும் சாத்தியமானது இல்லைத்தான்.

நல்லாட்சி அரசாங்கம் தோல்வியில் முடிந்து கோட்டாபய ஜனாதிபதி ஆகிய பின்னர், நடந்த பாராளுமன்ற தேர்தல் பிரசாரத்தின்போது தமிழ் அரசு வேட்பாளராக போட்டியிட்ட சுமந்திரன் ஒரு தொலைக்காட்சி பேட்டியில் கூறியிருந்தமை இப்போது ஞாபகத்துக்கு வந்து தொலைக்கின்றது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஐந்து வருடங்களாக சுமந்திரன் தயாரித்த புகழ்பெற்ற "எக்க ராஜ்ய" தீர்வுப் பொதியைப் பற்றி அந்தப் பேட்டியில் கருத்து தெரிவித்த சுமந்திரன, அது வீணாகிப் போய்விடவில்லை என்றும் இனி யார் தீர்வு பற்றி பேசினாலும் அதிலிருந்துதான் தொடங்கவேண்டியிருக்கும் என்றும் கூறியிருந்தார்.

அப்படியெனில், அந்த தீர்வுப்பொதி தயாரிப்பதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்த அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை - அந்த விட்ட இடத்திலிருந்து தொடங்க சம்மதித்தால் நாங்கள் உங்களை ஆதரிக்க தயாராக இருக்கின்றோம் என்றாவது தமிழ் அரசு நிபந்தனை விதிக்கிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

- ஊர்க்குருவி

# பெருந்தோட்ட மக்களுக்கு நிரந்தர காணி உறுதிகள்!

**ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய**

கொழும்பு, ஒக. 02

பெருந்தோட்ட மக்களின் உண்மையான சமூகமயமாக்கலுக்கு அவர்கள் அனைவருக்கும் நிரந்தர காணி உறுதி பத்திரங்களை வழங்குவோம் என்று பெருந்தோட்ட நிறுவன மறுசீரமைப்பு அமைச்சரும் நிதி இராஜாங்க அமைச்சருமான கலாநிதி ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

சுமார் 200 வருட கால வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்ட மக்களே தமக்காக உரிமை இல்லாத காணிகளால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

தோட்ட மக்கள் வசிக்கும் வீடுகளுக்கு முழு உரிமை வழங்குவது தொடர்பாக புதன்கிழமை கேகாலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சியம்பலாபிட்டிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கருத்துத் தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தின் பிரகாரம் பெருந்தோட்ட மக்களுக்காக புதிய கிராமங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தோட்டக் கம்பனிகள் அதற்கான காணிகளை ஒதுக்கீடு செய்து அரச தலையீட்டில் வீடுகள் நிர்மாணிக்கப்படும் எனவும் தெரிவித்த அமைச்சர், சகல வசதிகளுடனும் கிராமங்கள் நிர்மாணிக்கப்படும் எனவும் தோட்ட மக்களை உண்மையாவே சமூகமயப்படுத்துவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் எனவும் தெரிவித்தார். (ஐ)

# டெங்கு விழிப்புணர்வுக்காக மாணவர்கள் நடைபவனி!

கண்டி, ஒக. 01

சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் செயல்பாட்டுக்கு அமைவாக கண்டி மோப்ரி கல்லூரியின் ஏற்பாட்டில் குண்டசாலை சுகாதார மருத்துவர் பணிமனை, பிரதேச பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகியன



இணைந்து நடத்திய டெங்கு விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று நடைபெற்றது.

டெங்கு இல்லாத நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளுக்கு அமைய டெங்கு நோயின் தாக்கம் தொடர்பான பதாதைகளை ஏந்திய வண்ணம் மாணவர்கள் இந்த ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

இந்த நடைபவனி பேரணி கெங்கல்லை தேசிய பாடசாலை மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி, திகன வரை சென்று மீளவும் குண்டசாலை சுகாதார மருத்துவர் பணிமனை முன்பாக நிறைவடைந்தது.

## 3 நிறங்களில் கடவுச்சீட்டு

கொழும்பு, ஒக. 02

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் புதிய அம்சங்களுடன் கூடிய கடவுச்சீட்டுகள் மூன்று நிறங்களில் வெளியாகவுள்ளன.

இதன்படி சாதாரண, உத்தியோகபூர்வ மற்றும் இராஜதந்திரிகளுக்கு என மூன்று வெவ்வேறு நிறங்களில் வழங்கப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். (ஐ)

## வாள்வெட்டில் இளைஞனின் கை துண்டிப்பு

புத்தளம், ஒக. 02

இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் வாள் வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான 23 வயது இளைஞன் ஒருவரின் கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டதுடன், காயமடைந்த நபர் கையை சம்பவ இடத்தில் விட்டு தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், மாரவில - பஹல வலஹாபிட்டிய பிரதேசத்தில் சில காலமாக நிலவி வந்த தனிப்பட்ட முரண்பாடு காரணமாக இந்த வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

காயமடைந்த இளைஞன் மாரவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் அங்கிருந்து கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொலிஸ் ஊடக பேச்சாளரின் கார் விபத்தில் சிக்கியது!

கொழும்பு, ஒக. 02

பதில் பொலிஸ் ஊடக பேச்சாளரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ருவான் குணசேகர பயணித்த கார் நேற்றுமுன்தினம் புதன் கிழமை விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின்போது எவருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர வாதுவையிலிருந்து கொழும்பு பொலிஸ் தலைமையகத்தை நோக்கி காரில் பயணித்துக் கொண்டிருந்தபோது லொறி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

லொறி சாரதியின் கவனக் குறைவால் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து, லொறி சாரதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்படி பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ)



அரைநூற்றாண்டுக்கு மேலாக பத்திரிகை பணியாற்றிவரும் வடமராட்சியின் சி. தில்லைநாதன் கொழும்புப் பத்திரிகையாளர்களால் கடந்த புதன்கிழமை கௌரவிக்கப்பட்டார். இதன்போது வீரகேசரி நாளிதழ் பிரதம ஆசிரியர் எஸ். சிறீகஜன் அவருக்கு பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தபோது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.08.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், ஆடி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தேர்தலில் வெளியாரின் கரிசனை

இந்த மாதம் பிரதமர் மோடி இலங்கை வரவுள்ளார் என்றும் இதன்போது சில முக்கிய உடன்பாடுகள் கைச்சாத்திடப்படவுள்ளன எனவும் - அதில் ராமர் பால - விவகாரமும் ஒன்று என்றும் விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கின்றார். பிரதமர் மோடியின் பதவியேற்பில் பங்குகொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரை இலங்கை வருமாறு அழைத்திருந்தார்.

அதன் பின்னர், இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் பிரதமரின் பயணத்தை உறுதிப்படுத்தியிருந்தார். ஆனால், அவர் எப்போது வருவார் என்னும் செய்தி இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் விமல் வீரவன்ஸ மேற்படி செய்தியை வெளியிட்டிருக்கின்றார். ஆனால், இவ்வாறான செய்திகள் தென்னிலங்கையின் தேர்தல் களத்தின்மீது செல்வாக்கு செலுத்தக் கூடியவை. தேர்தல் காலத்தில் செய்திகளின் உண்மை அல்லது பொய் தொடர்பில் எவரும் ஆராயப் போவதில்லை.

மோடி இந்த மாதம் இலங்கைக்கு வருகை தருவாராயின், அது அரசியல்ரீதியில் பல செய்திகளைக்கூறும். தேர்தலுக்கு பின்னர் வந்தால், அதன் பொருள் வேறு. ஆனால், தேர்தலுக்கு முன்னர் வருகின்றபோது, அவர் மறைமுகமாக எவரையாவது ஆதரிக்க முற்படுகின்றாரா என்னும் செய்தியே உற்றுநோக்கப்படும். இலங்கையின் தேர்தல் முடிவுகள் இந்தியாவை பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானவை. ஏற்கனவே, மாலைதீவில் சில படிப்பினைகளை பெற்றிருக்கும் இந்தியா - நடைபெறவுள்ள தேர்தலை உற்று நோக்குவதை தவிர்க்க முடியாது. இதேவேளை, சிலர் கற்பனை செய்வது போன்று இந்தியா ஒரு குறித்த வேட்பாளரை ஆதரிக்குமா?

ஒரு குறிப்பிட்ட வேட்பாளரை ஆதரிக்கும்போது அவர் ஒருவேளை தோல்வியடைந்தால் என்ன செய்வது? - இந்தக் கேள்வியின் அடிப்படையில்தான் ஒரு பிராந்திய சக்தி விடயங்களை உற்று நோக்கும். இந்த அடிப்படையில் நோக்கினால் இந்தியா அனைவரையுமே ஆதரிக்கும் - வெற்றி பெறுபவருடன் இணைந்து பணியாற்றும். இன்றைய சூழலில், கொழும்பின் அதிகாரத்தை எவர் கைப்பற்றினாலும் அவருக்கு இந்தியா தேவை. இந்தியாவின்றி அவரால் அசைய முடியாது. இந்த அரசியல் சமன்பாடு அநுர குமாரவுக்கும் பொருந்தும். இதேபோன்றுதான் ஈழத்தமிழரின் நிலைமையும்.

சீனாவின் அணுகுமுறையும் ஏறக்குறைய அவ்வாறுதான் இருக்கப் போகின்றது. வெற்றிபெறுபவருடன் பணியாற்றுவதுதான் சீனாவின் அணுகுமுறையாக இருக்கும். 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது சீனா சற்று எட்ட வைக்கப்படுவதான தோற்றமே காணப்பட்டது. ஆனால், புதுச் செருப்பு கடிக்கும் என்பதுபோல் அனைத்துமே ஒரு குறுகிய காலத்துக்குள் மாறிவிட்டன. இறுதியில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு விடும் நிலைமையே ஏற்பட்டது. இதில், காலஞ்சென்ற இரா. சம்பந்தனுக்கும் தொடர்பு இருப்பதான சந்தேகம் நிலவுகின்றது.

இந்த அடிப்படையில் நோக்கினால் தேர்தல் முடிவுகள் தொடர்பில் இலங்கைத் தீவில் தலையீடு செய்யும் வெளியார் - குறிப்பாக, இந்தியா அதன் கரிசனையை காண்பிக்காமல் இருக்க முடியாது. நிலைமைகள் எதிர்பாராதவிதமாக அவர்களின் கணிப்பை மீறுவதாக உணர்ந்தால் எதிர்பாராத தலையீடுகள் நிச்சயம் நிகழும். ஆனால், அது தமிழ் சூழலில் கற்பனை செய்வதுபோல் அமையப் போவதில்லை. ஆனால், வெளியாரின் கரிசனைகள் தொடர்பில் தமிழ் சூழலில் ஆழமான அவதானம் இருப்பது அவசியமானது.

# மியன்மாரில் தொழில் தேடுவதை தவிருங்கள்

## பாதுகாப்பு செயலர் அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 02

சட்டவிரோதமான வழிகளில் மியன்மாரில் தொழில் தேடுவதைத் தவிர்க்குமாறு இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன மக்களை கேட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையின்படி, சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் அல்லது மனித கடத்தலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் மியன்மாரில் வேலை தேடுவதைத் தவிர்க்குமாறு குடிமக்களை அரசாங்கம் கடுமையாக அறிவுறுத்துகிறது.

மியன்மாரில் சட்டவிரோ தமாக வேலைக்காகச் சென்ற இலங்கையர்கள் குழு மியன்மாரில் பயங்கரவாத குழுக்களால் நடத்தப்படும் சைபர் கிரைம் பகுதியில் உள்ள முகாமில் சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக வலுக்கட்டாயமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கம் முன்னெச்சரிக்கை விடுத்திருந்த போதிலும், 89 இலங்கையர்கள் சட்டவிரோதமாக மியன்மாருக்கு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. மியன்மார் அரசாங்கத்தின் உதவியுடன் அதிகாரிகளின் அர்ப்பணிப்பு முயற்சியின் மூலம் 40 இலங்கையர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர், என்றார்.

எவ்வாறாயினும், சைபர் கிரைம் பகுதியில் 54 இலங்கையர்கள் சிக்கியுள்ளனர். இலங்கை அரசாங்கம், மியன்மார் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன், இன்னும் சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகவும் பாதுகாப்பு செயலாளர் வெளிப்படுத்தினார். (ஐ)

# காட்டுயானையால் பயிர்கள் சேதம்!

கிளிநொச்சி, ஓக. 02

தருமபுரம் பகுதியில் குடியிருப்புக்குள் காட்டு யானை ஒன்று புகுந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை குடிமனைகளுக்குள் புகுந்த யானை, வாழ்வாதார பயிர் செய்கைகளை அழித்துள்ளது. சுமார் 4 பரப்பு காணியிலிருந்த வாழ்வாதார பயிர்கள் அழிக்கப்பட்டன என்று மக்கள் தெரிவித்தனர்.

குடிமனைகளுக்குள் யானை நுழைவதைத் தடுக்க வனவளத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (ஐ)

# சிறுகதை தொகுதி அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 02

“நம்மட முற்றம்” சஞ்சிகையின் வெளியீடான 15 எழுத்தாளர்களின் சிறுகதைகளின் தொகுப்பான “அரமியம் 1” இன் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல.18/2, அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந் துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தொடக்கவுரையை நூலின் தொகுப்பாசிரியர், பொறியியலாளர் கதிர். திருச்செல்வம், அறிமுகவுரையை ஆய்வாளரும் ஆசிரியருமான சி. ரமேஸ், கருத்துரைகளை ஆய்வாளர்களான சி.விமலன், ச.சத்தியதேவன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமார், இளம் எழுத்தாளர்களான மாதவி உமாசுத சர்மா, வை. முகுந்தினி ஆகியோர் வழங்குவர்

# இணுவில் பொது நூலகத்தில் களைகட்டிய சிறுவர் சந்தை!



யாழ்ப்பாணம், ஓக. 02


இணுவில் பொது நூலக சிறுவர் திறன்விருத்திமைய மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு சிறப்புற நடைபெற்றது.

பொது நூலக தலைவர் ம. கஜந்தரூபன் தலைமையில் நூலகக் கொடியேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. மாணவர்கள் தேவாரம் இசைத்ததை தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டது.

வாழ்த்துரையை முன்னாள் பேராசிரியர் க. தேவராஜா, ஆசிரியர் இரா. அருட்செல்வம் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து அதிபர் உரையை சிறுவர் திறன்விருத்தி மைய அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை ஆற்றினார்.

தொடர்ந்து சிறுவர் சந்தை நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அயல் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-02)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனக் குழப்பம் நீங்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி கள் ஒத்துழைப்பார்கள். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். ரகசியங் களை வெளியிட வேண்டாம். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப் பீர்கள். வாகனம் தொந்தரவு தரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். மேல திகாரிகளிடம் விவாதம் வரும். முன்னேறும் நாள்.

**சிம்மம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட் டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பெற்றோரு டன் மனம் விட்டு பேசுவீர்கள். மதிப்புக் கூடும்.

**கன்னி**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர், நண்பர்களால் ஆதாய முண்டு. வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். மதிப்பார்கள். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதி காரி உதவுவார். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந் தங்கள் தள்ளிப் போகும். மேலதிகாரிகளுடன் அள வாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப் பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக செயல்படுவார் கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அரசால் அனுகூலம் உண்டு. உற வினர், நண்பர்களின் வருகையால் வீடு களைகட் டும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**கும்பம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர் கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும்.

**மீனம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற் றாக்குறையை சமாளிப்பீர்கள். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். ஷைப்பால் உயரும் நாள்.

# நான் ஜனாதிபதி இல்லை

## ஆளுநர் விவகாரம் குறித்து முதல்வர் பதில்

சென்னை, ஒக. 02

"நான் ஜனாதிபதியோ, பிரதமரோ இல்லை. அதுதொடர்பில் இப்போது கருத்துக்கூற முடியாது" என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

இதேவேளை, நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட கேரளாவுக்கு இன்னும் உதவிகள் தேவைப் பட்டால் வழங்கப்படும் என்றும் முதல்வர் கூறினார்.

சென்னை கொளத்தூரில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட முதல்வர் ஸ்டாலின் செய்தியாளர்களை சந்தித்தார். இதன் போது, ஆளுநர் பதவி நீடிப்பு குறித்த கேள்விக்கு நான் ஜனாதிபதியோ, பிரதமரோ இல்லை என்று பதிலளித்தார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி மீது சாதிய ரீதியிலான தாக்குதல் குறித்து கேள்வி எழுப்பியபோது, அது தொடர்பில் இப்போது கருத்துக்கூற முடியாது- என்றார். (எ)

# போலிப் பேராசிரியர்கள் நியமன ஊழல் பெரும் அதிர்ச்சியளிக்கிறது

## தி. மு. க. அரசுக்கு சீமான் கண்டனம்

சென்னை, ஒக. 02

அறப்போர் இயக்கம் வெளிக் கொண்டுவந்துள்ள அண்ணா பல்கலைக்கழக போலிப் பேராசிரியர்கள் நியமன ஊழல் பெரும் அதிர்ச்சியளிக்கிறது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளாக இடம்பெற்றுள்ள இந்த ஊழல் குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்காமல், வழக்கம்போல குழு அமைத்து கிடப்பில்போட்டுள்ள தி. மு. க. அரசின் மெத்தனப்போக்கு வன்மையான கண்டனத்துக்குரியது என்றும் சீமான் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசின் கீழ் இயங்கும் அண்ணா பல்கலைக்கழகத்தில் அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள் என மொத்தம் 480 உறுப்புக் கல்லூரிகளில் ஏறத்தாழ 52,500 பேராசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். அவற்றில் 224 தனியார் சுயநிதி கல்லூரிகளில் பணியாற்றும் 353 பேராசிரியர்கள், ஒன்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகளில் ஒரே நேரத்தில் பணிபுரிவது போன்று போலியாக கணக்கு காட்டப்பட்டிருப்பது ஆதாரங்களுடன் கண்டறியப் பட்டுள்ளது.



பேராசிரியர் பட்டம் தாங்கிய ஐந்து பேர் ஒரே நேரத்தில் 11 கல்லூரிகளில் முழுநேரப் பேராசிரியர்களாகப் பதிவு செய்திருக்கிறார்கள். அதுமட்டுமின்றி ஒரே பேராசிரியர் 32 கல்லூரிகளில் முழு நேரமாக பணியாற்றுவதாகவும் கணக்கு காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறாக 211 பேராசிரியர்கள் ஏறத்தாழ 2,500 இடங்களில் பணிபுரிவதாகப் போலியாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் இது போன்ற முறைகேடுகள் இடம் பெறா வண்ணம் விழிப்புடன் செயல்பட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தனது அறிக்கையில் சீமான் அறிவுறுத்தியுள்ளார். (எ)

# ஜனநாயக போராட்டங்களை தடுக்கும் பொலிஸாருக்கு எதிராக தீர்மானங்கள்

சென்னை, ஒக. 02

தமிழ்நாட்டில் அண்மைக்காலமாக ஜனநாயகப் போராட்டங்கள், ஊர்வலங்கள் தடுக்கப் படுகின்றன. தி. மு. க. தனது தேர்தல் வாக்குறுதியில் கூறியவற்றை நடைமுறைப்படுத்தக் கோரி போராடுபவர்களை அடக்கி ஒடுக்க பொலிஸார் முயல்வது நியாயமற்றது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்தக் கட்சியின் தமிழக மாநில செயல்குழு கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இதில் சென்னையில் பேரணி நடத்துவது, ஒன்று கூடுவது, அமைச்சர்களை சந்தித்து பேசுவதை குற்றமாக கருதி கைது செய்யும் போக்கை மாநில அரசு மேற்கொள்ளக் கூடாது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (எ)

# "மத்திய பட்ஜெட்டில் சமூகநல திட்டங்களுக்கு நிதி குறைப்பு"

சென்னை, ஒக. 01

மத்திய அரசின் (பட்ஜெட்) நிதிநிலை அறிக்கையில் சமூக நலத்திட்டங்களுக்கான நிதி குறைக்கப்பட்டிருக்கிறது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை குற்றஞ் சாட்டியுள்ளார்.

கிராமப்புறங்களில்வறுமையை ஒழிக்க,வாழ்வாதாரத்தை உயர்த்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கொண்டுவந்த 100 நாள் வேலைத் திட்டத்துக்கு படிப்படியாக நிதியைக் குறைத்து பா. ஜ. க. புறக்கணித்து வருகிறது. 100 நாள் வேலைத் திட்டத்துக்கு 2015 - 16-ல் மொத்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகை 2. 09 சதவீதமாக இருந்தது, இப்போது 1. 78 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

இந்து முன்னணி பிரமுகர் கொலை

# தமிழகம் முழுவதும் என். ஐ. ஏ. சோதனை

திருச்சி, ஒக. 02

திருவிடைமருதூரைச் சேர்ந்த இந்து முன்னணி பிரமுகர் ராமலிங்கம் கொலை செய்யப்பட்ட வழக்கில் தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ.) அதிகாரிகள் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் தொடர்ந்து சோதனை நடத்தி வரும் நிலையில், திருவாரூர், மயிலாடுதுறை, காரைக்கால், திருச்சி, கும்பகோணம் உட்பட பல இடங்களில் நேற்று சோதனை நடத்தினர். (எ)

# சந்திரபாபு நாயுடு சென்னை வருகை

சென்னை, ஒக. 02

சென்னை எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் நடைபெறும் இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பதற்காக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஒகஸ்ட் 7ஆம் திகதி சென்னைக்கு வருகிறார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறை குழுவை ஏவிவிட்டு கணவனை கொன்ற மனைவி

## உடுப்பிட்டி கொலையின் மர்மம் அம்பலம் மனைவிக்கு உதவிய இளைஞரும் கைது!

வடமராட்சி, ஒக. 02

**வன்முறை கும்பலை ஏவி கணவனை படுகொலை செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவரும் அவருக்கு உடந்தையாக இருந்த இளைஞரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

உடுப்பிட்டியில் கடந்த ஜூன் 3ஆம் திகதி அதிகாலை 3ஆம் திகதி அதிகாலை கோழி இறைச்சிக்கடை உரிமையாளர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். வெளிமாவட்டத்திலிருந்து இறைச்சிக்காக கொண்டு வரப்பட்ட கோழிகளை வழங்கிய பின்னர் வாகனம் திரும்பிச் சென்றிருந்தது.

இதன் பின்னர் வீட்டின் வெளியே சத்தம் கேட்கவே குடும்பஸ்தர் வெளியே வந்து பார்த்துள்ளார். அப்போது, வன்முறை கும்பல் அவரை வாளால் வெட்டியது.

சத்தம் கேட்டு அவரின் மனைவி வெளியே வந்தபோது, அவரை வாள்முனையில் அச்சுறுத்தி தங்க சங்கிலியை கொள்ளையிட்டு அந்தக் குழு தப்பிச் சென்றதாகக் கூறப்பட்டது. படுகாயமடைந்த குடும்பஸ்தர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் உயிரிழந்தார்.

இந்தக் கொலை தொடர்பில் விசாரணை நடத்திய நெல்லியடி பொலிஸார், நகைக்காகவே இந்தக் கொலை இடம்பெற்றதாக கொலையானவரின் மனைவி பொய்கூறி நாடகமாடியதை கண்டுபிடித்தனர். தொடர்ந்து, அந்தப் பெண்ணைக் கைது செய்தனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இது திட்டமிட்ட கொலை என்பதை கண்டறிந்தனர். அத்துடன், இந்தக் கொலையுடன் தொடர்புடைய இளைஞரையும் கைது செய்துள்ளனர்.

(ஐ-02)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்!

வடமராட்சி, ஒக. 02

விபத்தில் சிக்கி படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த வடமராட்சி கல்வி வலய ஊழியர் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

வடமராட்சி கல்வி வலய ஊழியரான யோகலிங்கம் அருள்காந்தன் (வயது 33) என்பவரே உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறை புற்றளை பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற விபத்தில் சிக்கி இவர் படுகாயமடைந்திருந்தார். (ஐ)

# அனலைதீவு பிரதான வீதி திருத்தப் பணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக. 02

அனலைதீவில் பிரதான வீதியின் திருத்தப் பணிகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகின.

நீண்டகாலமாக இந்தவீதி திருத்தம் செய்யப்படாமல் குண்டும்குழியுமாகக் காணப்பட்டது. இதனால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

வடக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 1.7 கிலோமீற்றர் நீளமான இந்த வீதியின் திருத்தப் பணிக்கு 2.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடற்றொழில் அமைச்சருக்கு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே இந்த நிதி ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# 4 கைத்தொழில் பேட்டைகளை வடக்கு, கிழக்கில் நிறுவ முடிவு

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம

கொழும்பு, ஒக. 02

திருகோணமலை, காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளத்தில் அரச - தனியார் கூட்டு முயற்சியில் 4 கைத்தொழில் பேட்டைகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“திருகோணமலை, காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் உள்ளிட்ட பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு கனடிய முதலீட்டாளர்களுடன் இணைந்து அரச - தனியார் கூட்டு முயற்சியில் 4 கைத்தொழில் பேட்டைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் காங்கேசன்துறையில் சுதந்திர வர்த்தக வலயத்தை நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# கனியவள மணல் அகழ்வுக்கான ஆய்வு அளம்பில் மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்!

முல்லைத்தீவு, ஒக. 02

அளம்பிலில் கனியவள மணல் அகழ்வுக்கான முன்னாயத்த ஆய்வு பணிக்கு சென்ற கனிய மணல் திணைக்கள மற்றும் பிற திணைக்கள அதிகாரிகள் மக்கள் எதிர்ப்பால் தமது ஆய்வைக் கைவிட்டு சென்றனர்.

நேற்றுமுன்தினம் அதிகாரிகள் ஆய்வுக்காக அளம்பிலில் இரு இடங்களுக்கு சென்ற நிலையில், அந்த இரு இடங்களிலும் மக்கள் எதிர்ப்பால் அவர்கள் ஆய்வை கைவிட்டு திரும்பிச் சென்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடந்த இரகசியகலந்துரையாடலை தொடர்ந்தே ஆய்



வுப் பணிக்காக அதிகாரிகள் அளம்பில் பகுதிக்கு சென்றிருந்தனர்.

இந்த ஆய்வு பணியில் கடலோர பாதுகாப்பு திணைக்களம், கனிய மணல் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், சுற்றுச்சூழல் திணைக்களம், நீர் வள முகாமைத்துவத்தினர், புவிசரிதவியல் திணைக்களம் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளும் உள்ளடங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# தமிழ் பொது வேட்பாளர் அடுத்த வாரம் அறிவிப்பு

## விக்னேஸ்வரன் எம். பி.

யாழ்ப்பாணம், ஒக. 02

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் அடுத்த வாரம் அறிவிப்புகள் வெளியாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், அவரிடம் தமிழ் வேட்பாளர் தொடர்பில் கேட்ட போதே



அவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் அநேகமான தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. வேட்பாளராக நிறுத்த சிலரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவர்களில் யாரை தெரிவு செய்வது என்பது தொடர்பில், அதுக்கென நியமிக்கப்பட்ட குழு ஆராய்ந்து வருகிறது. அடுத்த வாரமளவில் ஒருவரை தெரிவு செய்து அவரின் பெயரை அறிவிக்கப்படும் - என்றார். (ஐ)

# சமஷ்டியை முன்வைக்கும் வேட்பாளரை ஆதரிப்போம்

## வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு

யாழ்ப்பாணம், ஒக. 02

ஜனாதிபதித் தேர்தலில் சமஷ்டி கோரிக்கையை முன்வைக்கும் வேட்பாளருக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அதன் தலைவர் க. லவகுலராசா தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போகும் வேட்பாளர்களுக்கு நாம் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கின்றோம். உங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வாக சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# ஓய்வுபெற்ற அதிபர் அழுகிய நிலையில் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக. 02

தனியாக வீட்டில் வசித்து வந்த ஓய்வு நிலை அதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

மயிலங்காடு வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு பகுதியைச் சேர்ந்த வேலாயுதர் பாலசுப்பிரமணியம் (வயது 68) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் மனைவியை பிரிந்து கடந்த 10 ஆண்டுகள் தனியாக வசித்து வந்துள்ளார். அவரின் பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். குறித்த வீட்டில் வாடகைக்கு குடியிருந்துவிட்டு வீட்டை விட்டு சென்றவர்கள் தமது பொருட்களை எடுப்பதற்கு வீட்டுக்கு வந்த வேளை குறித்த நபர் நிர்வாண நிலையில் வீட்டினுள் சடலமாக காணப்பட்டார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# சிறுமி வன்புணர்வு குடும்பஸ்தர் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 02

துன்னாலையில் 9 வயது சிறுமியை கடத்தி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய 33 வயது நபரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடந்த இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தேகநபரை கைது செய்தனர்.

கைதானவர், அதே இடத்தைச் சேர்ந்த 33 வயது நபர் என்றும் அவர் ஏற்கனவே திருமணமானவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். பிக்களின் வீடுகளை எரிப்பது நியாயமானதே!

## நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஓக. 02

**பாராளுமன்ற உறுப்பினர்களை தாக்கி அவர்களின் வீடுகளை எரிப்பது நியாயமானது என சிறீ லங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் கூட்டம் ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கட்சி என்ற ரீதியில் நாம் வலுவாக இருக்கிறோம். இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி வகித்த போதும் சிலர் சுயாதீனமாக செயல்படுவதாக அறிவித்தனர்.

ராஜபக்ஷக்களால் தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஜனாதிபதிக்கு உதவுவதில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. தற்போது, ஜனாதிபதி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேசி தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியை பெற்றுக் கொள்ள முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

எண்ணிக்கை விளையாட்டில் ஈடுபட எம்மாலும் முடியும். எனினும், அவ்வாறு செய்து



அவர்களின் நிலைமைக்கு கீழே இறங்க நாம் விரும்பவில்லை.

தேர்தலின் போது மக்கள் யாருடன் இருக்கின்றார்கள் என்பது தெரியவரும்.

அரசியல்வாதிகள் தொடர்பில் மக்களின் நிலைப்பாட்டை சில அரசியல்வாதிகள் உறுதிப்படுத்துகின்றனர். இவ்வாறான பின்னணியில் அரசியல்வாதிகளை தாக்கி வீடுகளை எரிப்பது நியாயமானது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# தகவல் தருவோருக்கு சன்மானம்

## யாழ்ப்பாண பொலிஸார் அறிவிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 02

யாழ்ப்பாணத்தில் இரவு வேளைகளில் முகத்தைமறைத்து கட்டியவாறு திரிந்து குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்கள் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், கொக்குவில், மானிப்பாய் பகுதிகளில் இடம்பெற்ற பல திருட்டு, கொள்ளை சம்பவங்களுடன் இந்த கும்பலுக்கு தொடர்பு உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், முகத்தை மறைத்தவாறு சைக்கிள்களில் வரும் நபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உடன் தகவல் வழங்குமாறும், தகவல் தரும் நபர்களின் இரகசியம் பாதுகாக்கப்படும். அவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்றும் யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (ஐ)



# ரணிலுக்கு ஆதரவளித்தோருக்கு துப்பாக்கி, மதுபானசாலை அனுமதி!

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 02

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம், ஆயிரத்து 200இற்கும் மேற்பட்ட மதுபானசாலை அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்தார்.

மூன்று இலட்சம் ரூபாய்க்கு



மேல் துப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அறகலய போராட்டத்தின் போது வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு மூன்று முதல் நான்கு கோடி ரூபாய் வரை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# மின் தாக்கி இளைஞர் உயிரிழப்பு

சிலாபம், ஓக. 02

தோட்டத்துக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டாரை மின்சாரத்துடன் இணைக்க முயன்ற இளைஞர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

புத்தளம் - நவகத்தேகம பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த 34 வயது இளைஞரே உயிரிழந்தார்.

புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரணிலையே பவித்ரா ஆதரிக்க வேண்டும்!

## மொட்டு கட்சியினர் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 02

ஜனாதிபதித் தேர்தலில் பவித்ரா வன்னியாராச்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான பவித்ரா வன்னியாராச்சியின் பெல்மதுளை இல்லத்தில் நேற்றுக் கூடிய மொட்டுக் கட்சியினரே இவ்வாறு வலியுறுத்தியிருந்தனர்.

அவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஜனாதிபதி தேர்தலில் கட்சியுடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை இரத்தினபுரி மாவட்ட மொட்டுக்கட்சி பிரதிநிதிகள் அனைவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் செல்ல தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# சட்டத்துக்கு முரணாக மணல் ஏற்றிய 14 சாரதிகள் கைது!



கிளிநொச்சி, ஓக. 02

அனுமதிப் பத்திரத்துக்கு முரணாகவும் அனுமதிப் பத்திரம் இல்லாமலும் மணல் ஏற்றிய வாகனங்களின் 14 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியின் பனங்கண்டி, முரசுமோட்டை, பரந்தன் பகுதிகளில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பனங்கண்டியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய மூன்று டிராக்டர்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

இதேபோன்று, ஏனைய பகுதிகளில் ஏ-9 வீதியில் நடத்தப்பட்ட சோதனையில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணாக மணல் ஏற்றிச் சென்ற 11 டிப்பர் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

கைதான அனைவரும் விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பிடிபட்ட வாகனங்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மணலுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

# ஜனாதிபதித் தேர்தலை நடத்த பொலிஸாரால் இடையூறு நேராது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, ஓக. 02

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு பொலிஸாரால் எவ்வித இடையூறும் ஏற்படமாட்டாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன், தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்று அந்த அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் அதிகாரிகளை தேவைக்கேற்ப கடமையில் ஈடுபடுத்துமாறு தேர்தல் நடவடிக்கைக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களில் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைப் போன்று இம்முறையும் தேர்தலுக்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றும் அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலான சந்திப்பிலேயே அமைச்சின் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். (ஐ)

# மைத்துனரை அலவாங்கால் தாக்கிக் கொன்றவர் கைது!

கொழும்பு, ஓக. 02

நித்திரையில் இருந்த தனது சகோதரியின் கணவரை அலவாங்கால் தாக்கிக் கொன்றவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

[illegible] சத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் 54 வயது நபரே உயிரிழந்தார். உயிரிழந்தவரின் மனைவி வெளிநாட்டில் பணியாற்றி வருகிறார். இந்த நிலையில், உயிரிழந்தவர் மனைவியின் இளைய சகோதரனுடன் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையிலேயே உறங்கிக் கொண்டிருந்தவரை அலவாங்கால் தாக்கி மைத்துனர் கொலை செய்தார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 171 அபிவிருத்தித் திட்டங்களை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஓக. 02

**கொரோனா தொற்று, பொருளாதார நெருக்கடிகளால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த 171 பெரும் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



இவற்றில் 58 வேலைத் திட்டங்களை இந்த வருடமும் அடுத்த வருடமும் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், "குடிதண்ணீர், சுகாதாரம், கல்வி, வீதிகள் போன்ற துறைகள் தொடர்பான 58 திட்டங்கள் இந்த ஆண்டு நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள 171 திட்டங்களில் 2 வெளிநாட்டு மானிய திட்டங்கள், 3 வெளிநாட்டு கடன் திட்டங்கள் மற்றும் 8 திட்டங்கள் உள்ளூர் நிதியில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த 08 திட்டங்களும் உள்ளடங்கலாக நிதியமைச்சின் அறிக்கைகளின்படி அடுத்த வருடத்தில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படும் திட்டங்களின் எண்ணிக்கை 113 ஆகும்.

கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் பல பெரிய அளவிலான திட்டங்கள் பாதியில் நிறுத்தப்பட்டன.

வெளிநாட்டு உதவி மற்றும் கடனில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் இருந்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட பின்னர் இந்த வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு அவர் தலையிட்டார். இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் இலக்காகும். இது எதிர்வரும் ஆண்டுகளில் முன்மொழியப்பட்ட புதிய திட்டங்களை ஆரம்பிக்க அனுமதிக்கும்." என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# துப்பாக்கி தவறுதலாக இயங்கியதில் ஒருவர் காயம்!

கொழும்பு, ஓக. 02

துப்பாக்கி தவறுதலாக இயங்கியதால் படுகாயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் விசாரணையில், பொலநறுவையை சேர்ந்த 46 வயது நபரே காயமடைந்தவர் என்று தெரிய வந்தது.

குரங்குகளைத் துரத்துவதற்காக அனுமதி பெற்ற துப்பாக்கியை கொண்டு செல்லும் போது, அது தவறுதலாக இயங்கியதாலேயே அவர் காயமடைந்தார் என்று காயமடைந்தவரின் மனைவி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# தேர்தல் சட்டங்களை மீறியமை; இதுவரை 125 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஓக. 02

தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து இதுவரை தேர்தல் சட்டங்களை மீறியமை உள்ளிட்ட 125இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நியமனம் வழங்குதல், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் ஆகியன இந்த முறைப்பாடுகளுக்குள் அடங்குகின்றன. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முறைப்பாடுகள் காணப்படுமாயின் தேர்தல் ஆணைக்குழுவில் நிறுவப்பட்டுள்ள முறைப்பாட்டு பிரிவில் அவற்றை முன்வைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தேர்தல் காலப் பகுதியில் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் பெரும்பாலானவை, அரச சொத்துகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றமை தொடர்பானது என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# எரிபொருள் விநியோகம் தடையின்றித் தொடரும்!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 02

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நாடளாவிய ரீதியில் தடையின்றி எரிபொருள் விநியோகத்தை தொடரும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் எக்ஸ் தளத்தில் பதிவிட்ட அமைச்சர்,

அனைத்து பொருட்களின் கையிருப்பையும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பராமரிப்பதால், தடைகளற்ற எரிபொருள் விநியோகம் நடைபெறும்.

அடுத்த 6 மாதங்களுக்கான எரிபொருள் சரக்கு திட்டம், இருப்பு சேமிப்பு திறன், விநியோக திட்டம் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன நிர்வாகத்துடன் ஆராய்ந்த பின்னர் அமைச்சர் புதுப்பிப்பை வழங்கினார். (ஐ)

# காஸா சிறுவர் நிதியத்துக்கு பங்களிப்பை செய்யாதீர்கள்!

## ஜனாதிபதி பணிமனை கோரிக்கை

கொழும்பு, ஓக. 02

காஸா சிறுவர் நிதியத்துக்கு பங்களிப்பு செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் 2024 ஜூலை 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. எனவே, இனியும் நன்கொடைகளை வைப்பிலிட வேண்டாம் என்று பொது மக்களிடம் ஜனாதிபதி பணிமனை கோரிக்கை விடுத்தது.

அத்துடன், 2024 ஜூலை 31 ஆம் திகதிக்கு பின்னர் எவரேனும் ஜனாதிபதி செயலகத்தின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யும் பட்சத்தில் அந்த நிதி சமூக நிவாரணச் செயல்பாடுகளுக்காக ஜனாதிபதி நிதியத்திடம் கையளிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது. (ஐ)

# கொடுப்பனவு தொகையை அதிகரிக்கின்றது அரசாங்கம்!

கொழுமபு, ஓக. 02

முதியோர் உதவித்தொகை, சுகவீன கொடுப்பனவு, விவசாய ஓய்வூதியம் போன்ற கொடுப்பனவு தொகைகளை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

இதன்படி, புற்றுநோய் கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவுகள் 3 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி, உதவித் தொகையை 5ஆயிரம் ரூபாயாக உயர்த்தி திருத்தப்பட்ட கொடுப்பனவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாழ்க்கை செலவு படிப்படியாக அதிகரித்து வருவதால் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# விஜயதாஸ ராஜபக்ஷ கட்டுப்பணம் கட்டினார்!

கொழும்பு, ஓக. 02

தேசிய ஜனநாயக முன்னணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாஸ ராஜபக்ஷ கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வகையில் தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை கட்டுப்பணத்தை செலுத்தினார்.

இராஜகிரியவிலுள்ள தேர்தல் ஆணைக்குழுவில் அவர் தனது கட்டுப்பணத்தை செலுத்தினார்.

2024 செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுதற்கு நேற்றுவரை 7 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இதில் ஐவர் கட்சி சார்பிலும் இருவர் சுயேச்சையாகவும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஐரோப்பிய ஒன்றியத்துடன் தேர்தல்கள் குழு ஒப்பந்தம்

கொழும்பு, ஓக. 02

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையே உடன்படிக்கை ஒன்று நேற்று வியாழக்கிழமை கைச்சாத்தானது.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு பணிகள் தொடர்பாகவே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

கண்காணிப்பு பணிகளை ஐரோப்பிய ஒன்றியம் முன்னெடுப்பதற்காக நிர்வாக செயன்முறை குறித்தே இந்த உடன்படிக்கை கைச்சாத்தானது. (ஐ)

# நான் குற்றவாளி இல்லை நீதிமன்றுக்கு கூறிய டயானா!

கொழும்பு, ஓக. 02

குடிவரவு - குடியகல்வு சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் தான் குற்றமற்றவர் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குடிவரவு - குடியகல்வு சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் அவருக்கு எதிராக நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட ஏழு குற்றப்பத்திரிகைகளை வாசித்த பின்னரே டயானா கமகே இதனை நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

இதன்படி, இது தொடர்பான வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது

காலாவதியான வீசாவுடன் இலங்கையில் தங்கியிருந்தமை, குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் போலியான தகவல்களை வழங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் டயானா கமகேவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்தக் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்குக

## கல்வி நிர்வாக சேவை சங்கம் கோரிக்கை

கல்முனை, ஓக. 01

**கிழக்கிலுள்ள தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க கல்வி அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்க செயலாளர் ஏ. எல். எம். முக்தார் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கிழக்கு மாகாண பாடசாலைகளில் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (எச். என். டி. ஈ) ஆசிரியர் நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இன்னும் நியமனம் வழங்காமல் கிழக்கு மாகாண சபை இழுத்தடிப்பு செய்து வருவதால் அவர்களை தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி கல்வி அமைச்சின் செயலாளருக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கல்வி அமைச்சினால் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு, கிழக்கு மாகாண சபை பாடசாலைகளுக்கு நியமனம் செய்வதற்காக தெரிவானோரின் 60 பேர் கொண்ட பெயர்ப் பட்டியல் ஜூலை 03 ஆம் திகதி கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஆனால், ஒரு மாத காலமாகியும் அந்த ஆசிரியர் நியமனம் கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகிறது.

எனினும், இதுபோல் ஏனைய மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெயர் பட்டியலுக்கு அமைவாக குறித்த ஆசிரியர் நியமனங்கள் கடந்த 08 ஆம் திகதி வழங்கப்பட்டு விட்டது.

எனினும் கிழக்கு மாகாண சபையானது ஒரு மாத காலமாகியும் உரியவர்களுக்கு இந்த ஆசிரியர் நியமனங்களை வழங்காமல் பல்வேறு சாக்குப் போக்குகளை கூறி

காலம் கடத்தி வருகிறது.

இதனால் நியமனத்துக்காக காத்திருக்கும் 60 வேலையற்ற ஆங்கில டிப்ளோமாதாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அரச தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் அவர்களது அடிப்படை மனித உரிமை கிழக்கு மாகாண சபை அதிகாரிகளால் மீறப்படுகின்றது என்று அந்தக் கடிதத்தில் முக்தார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)



# ஐஸ் போதையுடன் தாய், மகன் கைது!

## பொலிஸார் தீவிர விசாரணை

இறக்காமம், ஓக. 02

ஐஸ் போதைப்பொருளுடன் கைதான தாய் மற்றும் மகன் உள்ளிட்டோரிடம் மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரிப்பத்தான் சேனை பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஐஸ் போதைப் பொருளுடன் தாயும் மகனும் கைது செய்யப்பட்டனர்.

இறக்காமம் விசேட புலனாய்வு பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இறக்காமம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே. எம். மகிந்த சேனாரத்ன வழிகாட்டலுக்கு அமைவாக விசேட புலனாய்வு பொறுப்பதிகாரி ஜே. எம். பி. கலந்த சூரிய தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 6 மில்லி 200 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர்களான தாய் மற்றும் மகன் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு, இவர்களை அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகள் பாராட்டி கௌரவிப்பு

கல்முனை, ஓக. 02

க. பொ. த. சாதாரண தரம் - 2024 மாணவர்களுக்கான கிழக்கு மாகாண மட்ட கணிப்பீட்டு பரீட்சையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகளில் 09 ஏ மற்றும் 08 ஏ சித்திகளைப் பெற்றவர்களை கௌரவித்து முன்னேற்ற அறிக்கை வழங்கி வைக்கும் நிகழ்வு பகுதித்தலைவி எம். ஜ. ஸிபா தௌபீக் தலைமையில் சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முதல்வர் ஏ. பி. நஸ்மியா சனூஸ் கலந்து கொண்டார்.

தரம் - 11 பிரிவு மாணவிகள் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி, இணைய வடிவமைப்பு, தேசிய வாசிப்பு மாதம், வலய மட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகம் போன்ற போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவிகளுக்கும் இதன்போது சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (எ)

# ரி - 56 ரக துப்பாக்கிகளுடன் கைதான மௌலவி ரி. ஐ. டியிடம் ஒப்படைப்பு!

வாழைச்சேனை, ஓக. 02

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் இரண்டு ரி - 56 ரக துப்பாக்கிகளுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட மௌலவி, பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வாழைச்சேனை, நாவலடி சந்தியில் செவ்வாய்க்கிழமை இரவு 8. 50 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது மௌலவியாக பயிற்றுவிக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர் இரண்டு ரி - 56 ரக துப்பாக்கிகளுடன் அரலகங்வில பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் மௌலவியாக பயிற்சி பெற்ற ஓட்டமாவடியைச் சேர்ந்த 43 வயதுடைய சந்தேகநபர், இரண்டு ரி - 56 துப்பாக்கிகள், 59 தோட்டாக்கள், இரண்டு மகசின்கள், ஒரு வாள் மற்றும் ஒரு தொலை நோக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார். இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் இவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்படும் போது சந்தேகநபரிடம் ஒரு ரி - 56 ரக துப்பாக்கி, 29 தோட்டாக்கள் மற்றும் ஒரு மகசின் என்பன இருந்தன. விசாரணைகளின் போது சந்தேகநபரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அருகில் உள்ள அவரது சகோதரரின் வீட்டில் மேற்கொண்ட சோதனையில் மேலும் ஒரு ரி - 56 துப்பாக்கி, 30 தோட்டாக் கள், ஒரு மகசின் மற்றும் வாள் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்ததன் பின்னணி குறித்து ஆராய்வதற்காகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காகவும் சந்தேகநபர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# புதிதாக நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு முதல் மாத சம்பளம்





கல்முனை, ஓக. 02

உள்ளூராட்சி மன்றங்களில் புதிதாக நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு முதல் மாத சம்பளம் வழங்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையில் புதிதாக நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களுடனான சந்திப்பு திங்கட்கிழமை மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸ் தலைமையில் மருதமுனை பொது நூலக சமூக வளநிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே ஊழியர்களுக்கு முதல் மாத சம்பளம் வழங்கப்பட்டது.

இதில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம், பொறியியலாளர் ஏ. ஜே. ஏ. எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதம சுகாதார மருத்துவ அதிகாரி அர்ஷாத் காரியப்பர், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ. ஏ. பாஸித் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக, ஒப்பந்த, அமைய அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் அரச திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையில் பல வருடங்களாக கடமையாற்றி வந்த 102 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் கடமைகளை பொறுப் பேற்றுக் கொண்ட 99 ஊழியர்களுக்கான முதல் மாத சம்பளம் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

இதற்காக கல்முனை மாநகர சபையின் சொந்த நிதியில் இருந்து சுமார் 49 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாநகர சபை ஆணையாளர், கணக்காளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகியோர் தமது உரைகளின்போது, புதிய ஊழியர்களுக்கான வரப்பிரசாதங்கள், கட்டுப்பாடுகள், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை எடுத்துரைத்து, அவற்றை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். (எ)

# கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் சதுரங்கத்தில் சம்பியன்

கல்முனை, ஓக. 01

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட சதுரங்க சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான 20 வயதுக்குட்பட்ட மற்றும் 17 வயதுக்குட்பட்ட பிரிவில் பங்கேற்ற கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்று சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டனர். அத்தோடு, தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவாகினர்.



திருகோணமலை புனித ஜோசப் கல்லூரியில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்மாயில் ஹனியே கொலைக்கு பழிக்குப்பழி வாங்குவது கடமை!

## ஈரான் ஆன்மீக தலைவர் ஐயத்துல்லா அலி



தெஹ்ரான், ஓக. 02

**ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவரான இஸ்மாயில் ஹனியேயை படுகொலை செய்த இஸ்ரேலை பழிக்குப் பழி வாங்குவது ஈரானின் தலையாய கடமை - இவ்வாறு ஈரான் ஆன்மீகத் தலைவர் ஐயத்துல்லா அலி கமேனி எச்சரித்துள்ளார்.**

ஹமாஸ் அமைப்பின் தலைவரான இஸ்மாயில் ஹனியே ஈரானில் உள்ள அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். அவரது பாதுகாவலர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

ஈரானின் புதிய ஜனாதிபதியாக மசூத் பெசெஸ்கியன் பதவியேற்றார். இந்த பதவியேற்பு விழாவில் இஸ்மாயில் ஹனியே பங்கேற்றார். அத்துடன் ஈரானின் உச்ச அதிகாரம் பெற்ற ஆன்மீகத் தலைவர் ஐயத்துல்லா அலி கமேனியையும் சந்தித்து பேசினார்.

இந்த நிலையில்தான் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டார். இஸ்ரேல் தான் இந்த படுகொலைக்கு காரணம் என ஹமாஸ் மற்றும் ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் ஆன்மீகத் தலைவர் ஐயத்துல்லா கூறுகையில், "ஈரான் தலைநகர் தெஹ்ரானில் வான்வழித் தாக்குதல் மூலம் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டதற்குப் பின்னர், இஸ்ரேல் தனக்குத்தானே கடுமையான தண்டனைக்குத் தயார்படுத்தியுள்ளது.

எங்களுடைய பணியான பழிக்குப்பழி குறித்து நாங்கள் பரிசீலனை செய்வோம். ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே எங்களுடைய நாட்டின் மதிப்பிற்குரிய விருந்தாளி என்றும் ஐயத்துல்லா அலி குறிப்பிட்டுள்ளார்.


காஸா மீதான தாக்குதலுக்குப் பின்னர் ஒருமுறை ஈரான் பகுதியில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக லெபனான் மற்றும் ஈரானில் இருந்து கடுமையான வான்வழித் தாக்குதலை நடத்தியது. அப்போது அமெரிக்கா உதவியுடன் வான்பாதுகாப்பு சிஷ்டம் மூலம் ஈரான் தாக்குதலை இஸ்ரேல் முறியடித்தது.

தற்போது ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்ட நிலையில் இஸ்ரேல் - ஈரான் இடையே நேரடி போர் மூளும் என அஞ்சப்படுகிறது.

(எ)

# இஸ்மாயில் படுகொலை இஸ்ரேல் கவலைப்படும்!

## ஈரான் ஜனாதிபதி எச்சரிக்கை



தெஹ்ரான், ஓக. 02

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியேயை கோழைத்தனமாக கொலை செய்தது குறித்து இஸ்ரேல் கவலைப்படும் என்றும் இந்தப் படுகொலைக்கு நிச்சயம் பதிலடி கொடுக்கப்படும் என்றும் ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியன் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, ஈரான் தனது ஆட்புல ஒருமைப்பாடு, கௌரவம் என்பனவற்றை நிச்சயம் பாதுகாக்கும்.

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே மிகவும் துணிச்சலானவர் என்றும் ஈரான் ஜனாதிபதி வர்ணித்துள்ளார்.

(எ)

# லெபனான்மீது குண்டுமழை

பெய்ரூட், ஓக. 02

இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா இராணுவத்தளபதி பௌத் சகர் உயிரிழந்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பு நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்குப் பகுதியில் கடுமையாக தாக்கினர். ஹிஸ்புல்லா அமைப்பை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்தது.

முன்னதாக உதைபந்தாட்ட மைதானத்தின் மீது ஹிஸ்புல்லா நடத்திய தாக்குதலுக்கு பௌத் சகர் தலைமை வகித்ததாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பு போரில் ஈடுபட்டு வருகிறது. இஸ்ரேல் கட்டுப்பாட்டுக்குள் உள்ள கோலன் ஹைட்ஸ் பகுதியில் உள்ள உதைபந்தாட்ட மைதானத்தில் சில தினங்களுக்கு முன் ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


# நாய்க்கு அளவுக்கு அதிகமாக உணவு வழங்கிய உரிமையாளருக்கு சிறை!

வெலிங்டன், ஓக. 02

நியூஸிலாந்தில் அளவுக்கு அதிகமாக உணவு வழங்கியமையால் நாய் ஒன்று உயிரிழந்த சம்பவம் தொடர்பில் உரிமையாளரான பெண்ணுக்கு இரண்டு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நகி என்ற நாய் 53 கிலோ கிராம் எடையும், கடுமையான உடல் பருமனும் கொண்டிருந்தது.

இந்த நாய்க்கு தினமும் சராசரியான உணவை விட 10



இறைச்சி துண்டுகளை அதிகம் கொடுத்து வந்ததனால் அந்த நாய்க்கு உடல் எடை அதிகரித்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

(எ)

# ஜனாதிபதி வேட்பாளர் கமலா கறுப்பினத்தவரா? இந்தியரா?

## ட்ரம்ப் கேள்வியால் பெரும் சர்ச்சை

வாஷிங்டன், ஓக. 02

கமலா ஹாரிஸ் கறுப்பினத்தவரா? இந்தியரா? என அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கேள்வி எழுப்பியுள்ளார்.

கறுப்பின பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் துணை ஜனாதிபதி பல வருடங்களாக தனது ஆசிய பின்னணியை மறைத்து வைத்திருந்தார் எனவும் ட்ரம்ப் பிழையான குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் அவர் கறுப்பாக மாறும்வரை அவர் கறுப்பினத்தவர் என்பது எனக்குத் தெரியாது எனக் குறிப்



பிட்டுள்ள ட்ரம்ப், அவர் தன்னை தற்போது கறுப்பினத்தவர் எனக் கருத வேண்டும் என விரும்புகின்றார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக அவர் கறுப்பினத்தவரா? இந்தியரா என்பது எனக்குத் தெரியாது எனவும் ட்ரம்ப் கூறினார்.

கமலா ஹாரிஸ் தனது சட்டத்துறை வாழ்க்கையின் ஆரம்பத்தில் பரீட்சைகளில் தோல்வியடைந்தார் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

(எ)

# வயநாடு நிலச்சரிவில் சிக்கி இதுவரை 300 பேர் உயிரிழப்பு

வயநாடு, ஓக. 02


இந்தியாவின் கேரள மாநிலம் வயநாடு பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்தது.

அந்தப் பகுதியில் மீட்புப் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. இதுவரை 1000 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

கேரள மாநிலம் வயநாட்டில் உள்ள முண்டக்கை, சூரல் மலை உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவால் ஏராளமான மக்கள் மண்ணில் புதைந்தனர். இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணியில் 130 பேர் உயிரிழந்ததாக தெரியவந்தது. தேசிய, மாநில பேரிடர் மீட்புப் படையினர், கேரள பொலிஸார், தீயணைப்புப் படையினர் ஆகியோருடன் இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகிய முப்படை வீரர்களும் களமிறங்கி தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று மாலை நிலவரப்படி உயிரிழந்தோர் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்தது. இன்னும் 200இற்கும் மேற்பட்டோரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 1,000இற்கும் மேற்பட்ட மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு தேசிய பேரிடர் மீட்புப் படை



யினர் அனுப்பி வைத்தனர். சூரல்மலை, முண்டக்கை பகுதியில் ஹெலிகொப்டர் மூலம் மட்டுமே ஏராளமானோர் மீட்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

வயநாடு மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ள தரவுகளில், இதுவரை 167 சடலங்களின் சட்ட நடைமுறைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் 77 ஆண்கள், 67 பெண்கள் மற்றும் 22 குழந்தைகள் உட்பட 96 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டன. 166 சடலங்கள் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட நிலையில், 75 சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

கேரள முதல்வர் பினராயி விஜயன் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்வதற்காக வயநாடு வந்துள்ளார். மேப்பாடி, சூரல்மலா மற்றும் முண்டக்கை பகுதிகளில் அவர் ஆய்வு நடத்தினார். இதேபோன்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் செயலாளர் பிரியங்கா காந்தி ஆகியோரும் நேற்று வயநாடு வந்துள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சிப்பானை இம்ரான், லொக்கு பெடி வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டனர்!


கோப்பு படம்

கொழும்பு, ஓக. 02

**பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர்களும் பாதாள உலக கும்பலை சேர்ந்தவர்களுமான கஞ்சிப்பானை இம்ரான் மற்றும் லொக்கு பெடி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.**

கஞ்சிபானை இம்ரான் என அழைக்கப்படும் மொஹமட் நஜீம் மொஹம்மட் இம்ரான் என்பவர் பெலாரஸ் நாட்டில் வைத்தும் லொக்கு பெடி என்பவர் டுபாயில் வைத்தும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளப் வசந்த என்று அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் கொலை சூத்திரதாரிகளாக கஞ்சிப்பானை இம்ரான் மற்றும் லொக்கு பெடி ஆகியோர் உள்ளனர் என்று விசாரணைகளில் தெரிய வந்தது.

பிரான்ஸில் தலைமறைவாகியிருந்த கஞ்சிப்பானை இம்ரான் பெலாரஸுக்கு தப்பிச் சென்றிருந்தபோதே கைது செய்யப்பட்டார்.

கிளப் வசந்தவின் கொலை சம்பவத்துக்காக கஞ்சிப்பானை இம்ரான் பெருந்தொகையை செலவிட்டார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# யார் வெளியேறினாலும் பெரமுன கட்சி வீழாது!

ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ

கொழும்பு, ஓக. 02

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து யார் வெளியேறினாலும் வாக்காளர்கள் கட்சியை விட்டு வெளியேறமாட்டார்கள் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் 92 உறுப்பினர்கள் கட்சியின் தீர்மானத்தை எதிர்க்கவில்லை. அவர்களில் சிலர் இன்னமும் பெரமுனவில் செயல்பட்டு வருகின்றனர்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் வாக்கு பலம் மகிந்த ராஜபக்ஷவிடம் இருப்பதால், மக்கள் கட்சியை விட்டு வெளியேற மாட்டார்கள், அவ்வாறு வெளியேறியவர்கள் 200, 500 அல்லது 1000 வாக்குகளையே எடுத்துச் செல்வார்கள். யார் சென்றாலும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன வீழாது - மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஜே. வி. பி. நாட்டை நிர்வகிக்கின்றது.

கட்சியை விட்டு வெளியேறியமைக்கான காரணம் மக்களுக்குத் தெரியும். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க கட்சி தீர்மானித்திருந்தால், அவர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்திருப்பார்கள். 15 இலட்சத்துக்கும் அதிகமான புதிய வாக்குகளை பெறக்கூடிய வேட்பாளரை பெரமுன நிறுத்தும்" என்றார். (ஐ)

# டிரான் அலஸுக்கு அச்சுறுத்தல் பாதுகாப்பை அதிகரிக்க திட்டம்!

கொழுமபு, ஓக. 02

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு பாதாள உலகக் குழுவிலிருந்து மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை புலனாய்வு அமைப்புகளால் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், அமைச்சர் டிரான் அலஸின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு புலனாய்வு அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

மேலும், பாதாள உலகத்தையும் போதைப் பொருளையும் ஒடுக்குவதற்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கியுள்ளனார். இந்த நடவடிக்கையின் கீழ் பெருமளவான போதைப் பொருள் கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே அமைச்சருக்கு பாதாள உலக கும்பல்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளன என்று தகவல்கள் தெரிவித்தன.

# பதில் பொலிஸ் மா அதிபரை ஜனாதிபதி நியமிக்க முடியும்!

மூத்த சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 02

அரசமைப்பின் பிரகாரம் பதில் பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அந்த நியமனத்தை மேற்கொள்வது தேர்தல் விதிகளை மீறுவதாக அமையாது. பதில் பொலிஸ்மா அதிபரின்கீழ் எவ்வித இடையூறுமின்றி தேர்தலை நடத்தமுடியும் - என்று மூத்த சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பொலிஸ் மா அதிபராக செயல்பட தென்னக்கோனுக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. தேர்தலில் தானும் போட்டியிடுவதால் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க மறுத்துவரும் ஜனாதிபதி, தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸ் மா அதிபரிடமிருந்தே சேவைகளை பெறமுடியும். மாறாக பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மூலம் அந்த சேவைகளை பெறமுடியாது என்று அரசமைப்பு கூறியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பொலிஸ்மா அதிபர் இல்லாவிடின் எவ்வாறு சேவைகளை பெறமுடியும்? என்றும் கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினரும் மூத்த சட்டத்தரணியுமான அமீர் ஃபாயிஸ்,

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டாலும், தற்போது அவர் பதில் பொலிஸ்மா அதிபரொருவரை நியமிப்பது தேர்தல் விதிகளுக்கு முரணானதாக அமையாது. பதில் பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கான அதிகாரம் அரசமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அந்த அரசமைப்பு கடமையை அவர் நிறைவேற்றுவது தேர்தல் விதிகளை மீறுவதாகாது - என்றார்.

மனித உரிமைகள் செயல்பாட்டாளரும் சட்டத்தரணியுமான கௌதமன் கூறுகையில்,

"இயங்குநிலையில் உள்ள அரசாங்கத்தில் ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் தனது வழமையான கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றலாம். பணியிடமாற்றம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாத போதிலும், ஒரு முக்கிய பதவி வெற்றிடம் காணப்படும்போது அதற்கு பொருத்தமான நபரை நியமிப்பதில் எவ்வித சிக்கல்களும் இல்லை. அரசமைப்பின் பிரகாரம் 3 மாதங்களுக்கு செல்லுபடியாகக் கூடியவகையில் பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கலாம் என்று சுட்டிக்காட்டினார்.

அரசமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அவரால் பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கமுடியும். அவ்வாறு நியமிக்கப்படும் பதில் பொலிஸ்மா அதிபரின்கீழ் தேர்தல் பணிகளை முன்னெடுக்கமுடியும் - இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார். (ஐ)

# போதைப்பொருளுடன் கைதான சிறை அதிகாரி பணி நிறுத்தம்!

கொழும்பு, ஓக. 02

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரி ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

வெலிக்கடை சிறையின் பிரதான வாயிலில் சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோபாய படை அதிகாரிகள் சிறைச்சாலை அதிகாரியை சோதனையிட்டபோது அவரிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் பொதிகள் கைப்பற்றப்பட்டன.

ந்தேக நபர் பாதணியில் ஐஸ் போதைப்பொருளை சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்தார் என்று சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட அதிகாரி சுமார் 20 வருடங்கள் சிறைச்சாலையில் பணியாற்றியுள்ளார். மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# மத்திய வங்கி ஆளுநர், விமான படை தளபதிக்கு தகவல் குழு அழைப்பாணை!

கொழும்பு, ஓக. 02

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி ஆளுநர், விமானப்படை தளபதி ஆகியோரை தகவல் ஆணைக்குழுவில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டுள்ளது.

2015 - 2024 மார்ச் 10ஆம் திகதி வரையிலான காலப்பகுதி வரை பதவி வகித்த மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் பல்வேறு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்களை ஊடகவியலாளர் ராகுல் சமந்த ஹெட்டியாராச்சி கோரியிருந்தார்.

எனினும், இலங்கை மத்திய வங்கி குறித்த தகவல்களை வழங்கவில்லை. இது தொடர்பில் தகவல் ஆணைக்குழு மேன்முறையீடு செய்யப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் தகவல் அதிகாரி, மத்திய வங்கியின் ஆளுநரை நாளை சனிக்கிழமை தகவல் ஆணைக்குழுவில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று, கடந்த மார்ச் 6 முதல் 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விமானப் படை கண்காட்சியின் செலவுகள் மற்றும் வருகை தரும் அரசியல் தலைவர்களுக்கு விமானப் படை விமானங்களை பயன்படுத்தியதால் ஏற்படும் செலவுகள் குறித்த தகவல்களை வழங்குமாறு இலங்கை விமானப் படையிடம் கோரப்பட்டிருந்தது.

விமானப் படையின் தகவல் அதிகாரி, விமானப் படை தளபதி ஆகியோர் அந்த தகவலை வழங்க மறுத்ததால் அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி தகவல் ஆணைக்குழுவில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டுள்ளது.

# சகல தெரிவத்தாட்சி அதிகாரிகளும் கொழும்புக்கு அழைக்கப்பட்டனர்!

கொழும்பு, ஓக. 02

சகல மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள், மாவட்ட பிரதி மற்றும் உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காகவே அவர்கள் நாளை சனிக்கிழமை கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் எதிர்வரும் 05ஆம் திகதியுடன் முடிவடைகிறது. (ஐ)

# சுற்றாடல் அதிகார சபைக்கு புதிய தலைவர் நியமனம்!

கொழும்பு, ஓக. 02

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு புதிய தலைவரை ஜூலை 30ஆம் திகதி முதல் நியமித்துள்ளார்.

புதிய மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவராக யு. டி. சந்தன ஜயலால் நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் சுற்றாடல் அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டோருக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டது.

தற்போதைய தலைவர் வேணுர பெர்னாண்டோவை திடீரென பதவி நீக்கியமைக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

இந்திய மீனவரின் உயிரிழப்புக்கு தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் உட்பட தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, உயிரிழந்த மீனவரின் குடும்பத்துக்கு 10 இலட்சம் இந்திய ரூபாயை நிவாரணமாக வழங்க தமிழ்நாடு முதல்வர் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## பாராளுமன்ற...

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு கோரி பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை நான் சந்தித்தேன் என்று ராஜபக்ஷர்களின் உறவினர் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் நபர் தெரிவித்துள்ளமை முற்றிலும் பொய்யானது. மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் என்று குறிப்பிடும் தரப்பினர்கள் கடந்த காலங்களில் எங்கிருந்தார்கள் என்று தெரியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நெருக்கடியான சூழ்நிலையின்போது நாட்டுக்காக சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளார். 2022ஆம் ஆண்டு இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்வதற்கு அவர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க போவதில்லை என்று பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுஜன பெரமுனவின் நலன் விரும்பிகள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து அரசியல் கற்றுக்கொள்ளாமல் இருப்பது கவலைக்குரியது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு நாட்டு மக்களை பாதுகாத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது கட்சியின் கொள்கைக்கு எதிரான தீர்மானமல்ல. கட்சிக்கு முன்னுரிமை வழங்குவதை விட நாட்டுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

பரந்துபட்ட அரசியல் கூட்டணியின் சுயேச்சை வேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க போட்டியிடவுள்ளார். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் ஜனாதிபதி வசமாகி விட்டது. 2022 ஆம் ஆண்டின் சமூக கட்டமைப்பின் நிலவரத்துக்கும் தற்போதைய நிலவரத்துக்கும் இடையில் பெரும் மாற்றம் உள்ளது - என்றார். (ஐ)

## நிர்வாகத்துக்கான...

லலித் பத்திநாயக்க தற்போது மத்திய மாகாணங்களின் மூத்த பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றி வருகிறார். அடுத்து, பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படுமிடத்து இவரே முன்னிலையில் இருக்கிறார் என்று கருதப்படுகின்றது.

நிர்வாகத்துக்கு பொறுப்பாக இருந்த மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தன உயிர்த்த ஞாயிறு தொடர்பான குண்டுத் தாக்குதல் தொடர்பான ஒழுக்காற்று விசாரணை முடிவடையும் வரை கடந்த ஜூலை 18ஆம் திகதி முதல் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார்.

இதனிடையே, பொலிஸ் மா அதிபராக செயல்பட தேசபந்து தென்னக்கோனுக்கு கடந்த 24ஆம் திகதி உயர்நீதிமன்றம் தடை விதித்தது. ஜனாதிபதித் தேர்தலும் அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸ் மா அதிபர் ஒருவர் பதவியில் இல்லாதமை பெரும் சிக்கலை ஏற்படுத்தும் என்று கூறப்பட்டது. இந்த நிலையில், பதில் பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே, நிர்வாக கடமைகளை மேற்கொள்ள வசதியாக லலித் பத்திநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 4,506 டெங்கு நோயாளர் ஜூலையில் அடையாளம்!

கொழும்பு, ஒக. 02

நாடு முழுவதும் ஜூலை மாதத்தில் 4 ஆயிரத்து 506 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 745 ஆக உயர்ந்துள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகளவானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகினர். இதனிடையே, ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 13 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னக்கோன்...

முன்னாள் பணிப்பாளரும் ஓய்வு பெற்ற மூத்த பொலிஸ் அத்தியட்சகருமான ஷானி அபேசேகரவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதால் பாதுகாப்பை அதிகரிக்குமாறும் அது தொடர்பான உண்மைகளை விளக்குமாறுமே அவர்கள் இருவருக்கும் உயர்நீதிமன்றம் அழைப்பணை பிறப்பித்துள்ளது. (ஐ)

## பொது...

போன்று இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகள் மிக முக்கியமானவை. இதன்விளைவாக தற்போது நாம் பேரம்பேசக்கூடிய வலு நிலையில் இருக்கின்றோம். இவ்வாறிருக்கையில் பொது வேட்பாளரை களமிறக்குவது பொறுப்பற்ற செயல் என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்றையதினம் ஊடகம் ஒன்றுக்கு அளித்த கருத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ஐ)

## தமிழ்...

வேட்பாளரை நிறுத்துவதற்கு தமிழ் சிவில் அமைப்புகளும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பை நிறுவியிருந்தன. அத்துடன், பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கும் உபகுழு ஒன்றை அமைக்கப்பட்டது. இந்த உபகுழுவிலும் அங்கம் வகிக்கும் சுரேஷ் பிரேசமந்திரனிடம் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## கடற்படை...

இதைத் தொடர்ந்து அவர்களை கைது செய்வதற்காக சென்றபோது கடற்படை படகு மோதியதில் மீனவர்களின் படகு கவிழ்ந்தது.

இதில், படகிலிருந்த 5 மீனவர்களும் கடலில் வீழ்ந்தனர். மூன்று மீனவர்கள் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர். எனினும் ஒரு மீனவர் மூழ்கி உயிரிழந்தார். இராமேஸ்வரத்தை சேர்ந்த மலைச்சாமி (வயது 59) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இதேநேரம், மற்றொருவர் காணாமல் போனார். அவரைத் தேடும் நடவடிக்கை தொடர்வதாக கடற்படையினர் தெரிவித்தனர். இந்தத் தேடுதல் நடவடிக்கையில் இந்திய கடற்படையின் கப்பலும் ஹெலிகொப்டரும் ஈடுபட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

உயிரிழந்த மீனவரின் சடலம் புங்குடுதீவு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை கைதுசெய்ய முற்பட்டவேளை இலங்கை கடற்படை சிப்பாய் ஒருவர் கடலில் விழுந்து உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெரமுனவின் முடிவில் உறுதியாக உள்ளேன்!

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 02

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனியாக ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான தீர்மானத்தில் நான் உறுதியாக இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ.

நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பெரமுன கட்சி தொடர்ந்தும் பேச்சுகளை நடத்தும். ஆனால், தேர்தலில் தனது வேட்பாளரை நிறுத்தும் என்றும் அவர் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து ரணிலுக்கு ஆதரவளிக்கக் கோரினர். ஆனால், இதனை ஏற்க பெரமுன கட்சி மறுத்துவிட்டது. தனியாக வேட்பாளரை நிறுத்தும் முடிவு பொதுஜன பெரமுன இறுதியைத் தேடித் தரும் என்று அவர்கள் எச்சரித்திருந்தனர். இந்த நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷ கட்சியின் தீர்மானத்தில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார். (ஐ)

# பொதுஜன பெரமுன தனது முடிவை மீளப்பெறவேண்டும்!

### மாத்தறை கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஒக. 02

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில் கட்சி எடுத்துள்ள தீர்மானம் மீளப்பெறப்பட வேண்டும் என வலியுறுத்தி சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மாத்தறை மாவட்ட கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் அமைச்சர் காஞ்சன விஜயசேகர தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசத்தை நீக்கிவிட்டு, அந்தப் பதவிக்கு அமைச்சர் ரமேஷ் பத்திரண நியமிக்கப்பட வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# ஜனாதிபதி உட்பட 100 பேரின் சொத்து விவரங்கள் பகிரங்கம்!

கொழும்பு, ஒக. 02

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் உட்பட 100இற்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளின் சொத்து விபரங்கள் தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன.

வங்கிக் கணக்குகளில் உள்ள நிலுவைகள் மற்றும் வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்ட திகதிகள் போன்ற பல முக்கியத் தகவல்கள் மற்றும் சொத்துப் பிரகடனத்தை பகிரங்கமாக்குவது போன்ற விடயங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு முக்கிய பரிந்துரை என்று இலங்கையின் ஆளுமை மற்றும் ஊழல் எதிர்ப்பு பிரிவின் தலைவர், வெரிடே ரிசர்ச் சங்கித குணரத்ன தெரிவித்துள்ளார்

இந்த சொத்து அறிக்கைகளை https://ads.ciaboc.lk மூலம் பார்வையிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சோதனை நடவடிக்கைக்கு சென்ற பொலிஸார் இருவர் தாக்கப்பட்டனர்!

கொழும்பு, ஒக. 02

சூதாட்டம் நடத்தப்பட்ட வீட்டை சோதனையிட சென்ற பொலிஸ் அதிகாரிகள் இருவர் அங்கிருந்தவர்களால் தாக்கப் பட்டுள்ளனர்.

மொனராகலை - வெல்ல வாய, குடா ஓயா பகுதியில் நேற்று வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், குடா ஓயா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த பொலிஸார் வெல்லவாய ஆதார மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க் கப்பட்டுள்ளனர்.

இதேநேரம், அந்த வீட்டிலிருந்த நபர் ஒருவரும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள் ளார். அவர், பொலிஸார் தன்னைத் தாக்கினர் என்று கூறியுள்ளார்.

# மாணவர்களிடையே மோதல் நால்வர் மருத்துவமனையில்!

ஹற்றன், ஒக. 02

ஹற்றனில் பிரபல பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 4 மாணவர்கள் டிக்கோயா கிளங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று 3 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.


ஒரே பாடசாலையில் கல்வி பயின்று வரும் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

பாடசாலை முடிந்து வீடு திரும்புவதற்காக பேருந்து நிலையத்துக்கு வந்த மாணவனை மற்றொரு மாணவன் கத்தியால் குத்தியுள்ளார். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதலில் காயமடைந்த நால்வர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதேவேளை தாக்குதல் நடத்திய மாணவனை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## ஊடகவியலாளர் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக. 03

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் அந்த அமையத்தின் தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தலில் நிலக்சனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கை மாணவனும் சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும் யாழ். மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 01ஆம் திகதி அவரது வீட்டுக்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுததாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர்கள் முன்னிலையில் சுட்டுப் படுகொலை செய்தனர். (எ)

## புதையல் தோண்டிய ஐவர் அநுராதபுரத்தில் மாட்டினர்

அநுராதபுரம், ஒக. 02

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஜேபுர பகுதியில் புதையல் தோண்டிய ஐவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பலாந்தோட்டை, திக்வெல்ல மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23, 33, 40, 46 மற்றும் 50 வயதுடைய ஐவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

## சமுத்திர தீர்த்தோற்சவம்

திருக்கோவில், ஒக. 02

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சிறீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலின் வருடாந்த ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இந்த உற்சவம் கடந்த 18 நாட்கள் பகல் இரவுத் திருவிழாக்களாக நடைபெற்று வருகின்றன.

நான்காம் திகதி தீர்த்த உற்சவத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

ஆலய பிரதமகுரு சிவ சிறீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவ சிறீ அங்குசநாதக் குருக்கள் தலைமையில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதால் முன்னேற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

தீர்த்தம் அன்று பிதிர்க்கடன் செலுத்துகின்றவர்களுக்கு வசதியாக சிவாச்சாரியர்களை உள்ளடக்கி பிதிர்க்கடன் நிறைவேற்றல் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் கூறினார். (எ)

### இந்திய மீனவர் உயிரிழப்பு:

## இலங்கை பதில் தூதுவரை நேரில் அழைத்து இந்திய வெளிவிவகார அமைச்சு கண்டனம்

புதுடில்லி, ஒக. 02

**இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவரை இலங்கை கடற்படையினர் கைது செய்ய முயன்றவேளை படகு கவிழ்ந்து அவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இந்தியா தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.**

இந்தியாவுக்கான இலங்கையின் பதில் உயர்ஸ்தானிகர் பிரியங்க விக்கிரமசிங்கவை நேரில் அழைத்து இந்திய வெளிவிவகார அமைச்சு தனது எதிர்ப்பு மற்றும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

துரதிஷ்டவசமான இந்த உயிரிழப்பு குறித்து எங்கள் அதிர்ச்சியையும் வேதனையையும் வெளிப்படுத்துகின்றோம் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா இந்த விவகாரம் குறித்து இன்று இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுகளை நடத்தவுள்ளார் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

## இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் வியாழேந்திரனின் சகோதரன் கைது

கல்லடி, ஒக. 02

வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் சகோதரன் மற்றும் செயலாளர் ஆகிய இருவர் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் நேற்று மட்டக்களப்பு, கல்லடி கடற்கரையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆற்று மணல் அகழ்வுக்கான உரிமத்தை வழங்குவதற்காக ஒருவரிடமிருந்து 15 இலட்சம் ரூபாய் பணம் இவர்களுக்கு இலஞ்சமாக வழங்கப் பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட இருவரையும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னதாக, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மற்றைய சகோதரன் ஒருவர் இலஞ்சக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்னைகளுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

### இராதாகிருஷ்ணன் எம். பி. தெரிவிப்பு

தலவாக்கலை, ஒக. 02

முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்து, அது தொடர்பில் கல்வி அமைச்சு உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு நடத்தப்பட்டு, உரிய தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி, அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு தலவாக்கலை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எதற்குமே அடித்தளம், ஆரம்பம் சிறப்பாக இருந்தால்தான் வெற்றிகரமாக முன்னோக்கி பயணிக்க முடியும். அந்தவகையில் முன்பள்ளி ஆசிரியர்களின் சேவைகள் போற்றுதலுக்குரியவை.

முன்பள்ளி ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இது பற்றி நான் பாராளுமன்றத்தில் உரையாற்றுவேன். கல்வி அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி, உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் - என்றார். (எ)



## திருடர்கள் குழுவுக்கு ஆதரவளிக்கமாட்டேன்!

### மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, ஒக. 02

எதிர்வரும் தேர்தலில் மக்கள் கவனமாக சிந்தித்து சரியான வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். நான் ஒருபோதும் திருடர்கள் குழுவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் சுமார் 20 வருடங்களாக நட்புறவுடன் பழகியதன் காரணமாக அவரை தமக்கு நன்கு தெரியும். கடந்த காலங்களில் புதிய பிரேரணைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படாமை வருத்தமளிக்கிறது.

இதேவேளை, எதிர்வரும் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் போது மிகவும் கவனமாக சிந்தித்து சரியான வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். எனவே, நான் ஒருபோதும் திருடர்கள் குழுவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை - என்றார். (ஐ)

## ஓட்டோவை கார் மோதிய விபத்தில் ஒருவர் மரணம்



கொழும்பு, ஒக. 02

காரும் முச்சக்கரவண்டியும் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார். கார் வீதியை விட்டு விலகி முச்சக்கரவண்டியை மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

காரின் சாரதி உறங்கியதால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை - ஹொரணையில் இடம்பெற்ற இந்த விபத்தின் போது முச்சக்கரவண்டியில் இருந்த இருவர் படுகாயமடைந்தனர். மருத்துவமனையில் இருவரும் சேர்க்கப்பட்ட நிலையில், அங்கு ஒருவர் மரணமடைந்தார்.

களுத்துறை, புலத்சிங்கள பிரதேசத்தை சேர்ந்த 29 வயது இளைஞரே உயிரிழந்தார்.

ஹொரணை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org